1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்டத்திலே இருக்கிறதால், மத்திய, மாநில அரசினுடைய நிபுணர்கள் அவ்வப்போது அழைக்கப்பட்டு, இதையெல்லாம் சரிபார்க்க சொல்லப்படுகிறார்கள். இவர்களும் அறிக்கைகளைத் தருகிறார்கள். அந்த அறிக்கைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இருந்தாலும், இந்த நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. இதுதான் இன்றைய நிலைமை. வெளிநாட்டிலேயிருந்து கூட நிபுணர்களை வரவழைத்து இவைகளை பார்க்கவேண்டுமென்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. அண்மையிலே பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனம் வெளிநாட்டிலேயிருந்து நிபுணர்களை வரவழைத்து அவர்களோடு ஒரு கருத்தரங்கம் நடத்தியிருக்கின்றது. ஆகவே, நிபுணர்கள் ஏற்கனவே இதில் அக்கரை கொண்டிருக்கிறார்கள், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்தாறு ஆகாச நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் எடுக்கும் திட்டம்

* வினா எண். 433 : திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கொல்லிமலையில் ஓடும் ஐந்தாறு ஆகாச நீர் வீழ்ச்சியில் மின்சாரம் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு மின் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் அய்யாறு ஆகாச நீர்வீழ்ச்சியிலே தண்ணீர் வருடம் முழுவதும் ஓடிக்கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி தமிழகத்தின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே அரசு இந்தத் திட்டத்தை எப்போது செயல்படுத்த முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கொல்லி மலையில் 3 ஆயிரம் அடிக்கு மேலே உள்ள 36.87 சதுர மைல் பரப்புள்ள நீர்ப்பிடிப்பிலிருந்து வரும் நீரைப் பயன்படுத்தி 20 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட சராசரியாக ஒரு வருடத்திற்கு 90 மிலியன் யூனிட்டுகள் கிடைக்கும்படியான நிலைமை இருக்கிறது. இப்போது அதைப்பற்றி வரைபடங்கள் மூலமாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

[1981 மார்ச் ௨௩

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அரசு எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை என்று மதிப்பீட்டுள்ளது? இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது ஆரம்ப நிலையில் உள்ளது. ரெக்கனைசன்ஸ் என்று சொல்வார்களே, அந்த ஆரம்ப நிலையில் தான் இருக்கிறது. ஆரம்ப சர்வே முடிந்த பிறகு தான் எவ்வளது செலவாகும் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை : கொல்லிமலையைத் தவிர சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற நீர்வீழ்ச்சிகளில் ஓடிக்கொண்டிருக்கின்ற நீரைப் பயன்படுத்தி புனல்மின் திட்டம் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் ஏதேனும் உள்ளதா? அப்படியிருக்குமானால் எந்த எந்த இடங்களில் அப்படிப்பட்ட புனல் மின் நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அய்யாறு ஆறு திட்டம் ஏர்க்காடு பம்ப்ட்ஸ்டாரேஜ் திட்டம் 100 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது. பழமலை பம்ப்டு ஸ்டோரேஜ் திட்டம் 100 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது. வேதாநிதி ஹைட்ரோ ஸ்கீம் 25 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது.

ஆரல்வாய் மொழி அண்ணா கலைக்கல்லூரிக்கு நிலப்பதிவு

வினா எண் 434 : திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி தொகுதி, ஆரல்வாய்மொழி அண்ணா கல்லூரிக்கு பாசன குளத்தில் இருந்து நிலம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பாசனம் பாதிக்காமல் இருக் லம் திரும்ப எடுக்கப்படுமா ?

(இ) பாசன வசதி பாதிக்கப்பட்டுள்ள நிலங்களின் அளவு என்ன?